“பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) குடும்பத்தினர்”

அகில உலகின் ஒப்பற்ற தலைவராக விளங்கும் அண்ணல் பெருமானார் (ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் குடும்பத்தினர் பற்றிய முழுமையான தகவலகளை உங்களுக்கு வழங்க விரும்புகிறோம்.

1. பெருமானாரின் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) குடும்பம் (தந்தை வழிப் பாட்டனார்கள்)

1. முஹம்மது (ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லம்) 2. அப்துல்லாஹ், 3.அப்துல் முத்தலிப் (ஷைபா), 4. ஹாஷிம் (அம்ரு), 5. அப்து மனாஃப் (அல்முகீரா), 6. குஸை (ஸைத்), 7. கிலாப் 8. முர்ரா, 9. கஃபு, 10. லுஅய், 11. காலிப், 12. ஃபிஹ்ரு, 13. மாலிக் 14. நள்ரு 15. கினானா 16. குஸைமா 17. முத்ரிக்கத் (ஆமிர்), 18. இல்யாஸ், 19. முளர், 20. நிஸார், 21. மஅத்து, 22. அத்னான் (அபுல் அரப்-அரபுகளின் தந்தை), 23.உதத்), 24. முகவ்விம், 25. நாஹூர், 26. தீரஹ், 27. யஃருப், 28. யஷ;ஜுப், 29. நாபித் 30. இஸ்மாயீல், 31. இப்ராஹீம் (கலீலுல்லாஹ்), 32. தைரஹ், (ஆஸர்), 33.நாஹூர், 34. ஸாரூஹ், 35.ராஹூ, 36. ஃபாலிக, 37. அய்பர், 38. ஷாலிக், 39. அர்ஃபக்ஷத், 40.ஸாம், 41. நூஹ் 42. லமக், 43.முத்வஷலக் 44.அக்னூக் (இத்ரீஸ்-இவரே ஆதமின் மக்களில் நுபுவ்வத்-இறைதூது வழங்கப்பட்டவரும் பேனாவினால் எழுதியவரும்) 45. யரித், 46. முஹ்லைல் 47. கைனுன் 48. யானிஷ் 49. ஷீது 50. ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) **(ஸீரத்துந்நபவிய்யா)**

முஹம்மது (ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் முதல் ஆதம் (அலை ஹிஸ்ஸலாம்) அவர்கள் வரை குடும்பச்சங்கிலி வரலாறுகளில் குறிப்பிடப்பட்டாலும் பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் குடும்பம் அவர்களின் பாட்டனார் ஹா ஷிம் இப்னு அப்துமனாஃப் குடும்பத்துடன் இணைத்து அழைக்கப்படுகிறது. இதனால் பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் குடுமபத்தை வரலாற்றாசிரியர்கள் ‘ஹாஷிமி’ குடும்பம் எனக்குறிப்பிடுகின்றனர். எனவே ஹா ஷிம் குடும்பம்பற்றி நாம் விரிவாகத் தெரிந்து கொள்வது அவசியமாகும். (இது பற்றி பின்னர் விரிவாகக் காண்போம்)

நபி (ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியுள்ளார்கள்:- இறைவன் நபி இஸ்மாயீல் (அலை ஹிஸ்ஸலாம்) அவர்களின் வழித்தோன்றல்களில் கினானாவைத் தேர்ந்தெடுத்தான். கினானா கிளையில் குரைஷி குடும்பத்தைத் தேர்ந்தெடுத்தான். குரைஷி குடும்பத்தில் ஹா ஷிம் மக்களைத் தேர்ந்தெடுத்தான். ஹா ஷிம் மக்களில் என்னை (நபியாகத்) தேர்ந்தெடுத்தான். (அறிவிப்பவர்: வாதிலா இப்னுல் அஸ்கஃ ரலியல்லாஹு அன்ஹு , **நூல்:முஸ்லிம்.**

2. பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) தாயார் குடும்பம் (தாய் வழிப்பாட்டனார்கள்)

1. தாயார் ஆமினாவின் தந்தை வஹப் 2. அப்து மனாஃப், 3. ஸுஹ்ரா, 4. கிலாப் 5. முர்ரா 6. கஃபு, 7. லுஅய்.

3. அப்துல் முத்தலிபின் பிள்ளைகள் 18 பேர் (ஆண்கள் 12 பேர். பெண்கள் 6 பேர்)

(பெருமானாரின் தந்தையின் சகோதரர்கள்)

1. அப்துல்லாஹ் 2. அபூதாலிப் (அப்து மனாஃப்) , 3. அஸ்ஸுபைர் (இவர்களின் தாயார் : ஃபாத்திமா பின்த் அம்ரில் மக்ஸூமிய்யா) 4. அல்-அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு (அப்பாஸியக் கலீபாக்களின் பாட்டனார்) , 5. ளிரார், (இவர்களின் தாயார் நுதைலா அல்அம்ரிய்யா) 6. ஹம்ஸா ரலியல்லாஹு அன்ஹு 7. அல்-முகவ்விம், (இவர்களின் தாயாது

ஹாலா பின்த் வஹப்) 8. அபூ லஹப் (அப்துல் உஸ்ஸா-தாயார் பனீகுஸாயீயாவைச்சார்ந்தவர்), 9.அல்-ஹாரித் (தாயார் ஸபிய்யா பின்த் ஆமிர் இப்னு ஸஃஸஆ, 10. அல்-ஈதாக்(ஹஜ்ல-தாயார்: மும்னிஆ, 11.அப்துல் கஃபா, 12.குதம். பெருமானாருக்கு நுபவ்வத் வந்த வேளை அவர்களின் தந்தையின் சகோதரர்களில் நால்வரே உயிர் வாழ்ந்தனர். அவர்களில் ஹம்ஸா ரலியல்லாஹு அன்ஹு , அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு ஆகிய இருவரே இஸ்லாத்தை ஏற்றனர்.

அபூ தாலிப் அவர்களின் நிலை அல்லாஹு வரஸூலஹு அஃலம் மற்றும் ஒருவரான அபூலஹப், இஸலாத்தை ஏற்கவில்லை.

4. பெருமானாரின் தந்தையின் சகோதரிகள்.

1. ஸஃபிய்யா ரலியல்லாஹு அன்ஹா 2. உம்மு ஹகீம் (அல்பைளாஃ)

3. ஆத்திகா ரலியல்லாஹு அன்ஹா 4. உமைமா, 5. அர்வா ரலியல்லாஹு அன்ஹா 6. பர்ரா,

5. பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) மனைவியர்.

‘உம்மஹாத்துல் முஃமினீன் ‘ உலக முஸ்லிம்களின் அன்னையர் என திருமறை போற்றும் ‘

பெருமானாரின் மனைவியர் : -

1. அன்னை கதீஜா பின்த் குவைலித் ரலியல்லாஹு அன்ஹா, (65-வயது)
2. அன்னை ஸவ்தா பின்த் ஸம்ஆ ரலியல்லாஹு அன்ஹா, (72-வயது)
3. அன்னை ஆயிஷா பின்த் அபீ பக்ர் ரலியல்லாஹு அன்ஹா, (63-வயது)
4. அன்னை ஹஃப்ஸா பின்த் உமர் ரலியல்லாஹு அன்ஹா (59-வயது)
5. அன்னை ஸைனப் பின்த் குஸைமா ரலியல்லாஹு அன்ஹா , (30- வயது)
6. அன்னை உம்மு ஸலமா பின்த் அபீ உமையா ரலியல்லாஹு அன்ஹா (80-வ வயது)
7. அன்னை ஸைனப் பின்த் ஜஹ்ஷ் ரலியல்லாஹு அன்ஹா (51- வயது)
8. அன்னை ஜுவைரிய்யா பின்த் ஹாரித் ரலியல்லாஹு அன்ஹா (71-வயது)
9. அன்னை ரம்லா பின்த் அபீ ஸுஃப்யான் ரலியல்லாஹு அன்ஹா (72 வயது)
10. அன்னை ஸஃபிய்யா பின்த் ஹுயய் ரலியல்லாஹு அன்ஹா (50 வயது))
11. அன்னை மைமூனா பின்த் ஹாரித் ரலியல்லாஹு அன்ஹா (80 வயது)

(வ அஸ்வாஜுஹு உம்மஹாதுஹும் - பெருமானார் அவர்களின் மனைவியர்கள் விசுவாசிகளின் தாய்மார்கள். **(அல்-குர்ஆன் 33:6)** பெயர்களுக்குபின் குறிப்பிட்ட ஆண்டுகள் அவர்கள் வாழந்த காலங்களாகும்.

6. பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் அடிமைகள் (ஸராரீர்) தாய்மார்கள்

1. மாரியத்துல் கிப்திய்யா ரலியல்லாஹு அன்ஹா
2. ரைஹானா பின்த் ஷம்ஊன் இப்னு ஸைது ரலியல்லாஹு அன்ஹா

இவர்களில் முதலாமவர் எகிப்து மன்னர் முகவ்கிஸால் அன்பளிப்பாக வழங்கப்பட்டவர். பின்னவர் பனீ குரைலாப் போரில் பெருமானார் பங்கிற்கு கிடைத்தவர். இருவரும் மனைவியர் அந்தஸ்தில் மதிக்கப்படும் தாய்மார்கள்.

7. பெருமானாரின் பிள்ளைகள் 7 பேர்

(ஆண்கள் 3 பேர்)

1.காஸிம் ரலியல்லாஹு அன்ஹு

இவர்களது தாயார்: கதீஜா ரலியல்லாஹு அன்ஹா. சிறு வயதில் மக்காவில் மரணடைந்த இவரகளதுது உடல் ஜன்னத்துல் முஅல்லாவில் அடக்கம் செய்ப்பட்டுள்ளது.

2.அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு

இவர்களது தாயார்: கதீஜா ரலியல்லாஹு அன்ஹா. சிறு வயதில் இவரும் மரண மடைந்து விட்டார். மக்காவில் ஜன்னத்துல் முஅல்லாவில் இவர்களது உடல் அடக்கம் செய்ப்பட்டுள்ளது.

இவர்கள் தையிப், தாஹிர் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார்.

காஸிம் (ரலியல்லாஹு அன்ஹு), அப்துல்லாஹ் (ரலியல்லாஹு அன்ஹு)இருவரும் நபி(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் நுபவ்வத்திற்கு முன்னரே பிறந்து இறந்து விட்டனர்.

3. இப்றாஹீம் ரலியல்லாஹு அன்ஹு

இவரது தாயார்: மாரியத்துல் கிப்தியா ரலியல்லாஹு அன்ஹா). சிறுவயதில் மரணமடைந்த இவர்களது சுமார் 18மாதங்கள் வாழ்ந்ததாக வரலாறு கூறுகிறது. இவரகளது உடல் மதீனாவில் ஜன்னத்துல் பகீயில் அடக்கம் செய்ப்பட்டுள்ளது.

8. பெருமானாரின் பெண் மக்கள்4 பேர்.

1. ஸைனப் (ரலியல்லாஹு அன்ஹா) – (ஸைனபுல் குப்ரா)

இவரை இவரது சிறிய தாயார் ஹாலாவின் மகன் அபுல் ஆஸ் இப்னு ரபீஃ (ரலியல்லாஹு அன்ஹு) என்பவர் மணம் புரிந்தார். அபுல்ஆஸ் 18 ஆண்டுகளுக்குப்பிறகே ஹி-6-ல் ஹுதைபிய்யா உடன் படிக்ககைக்குப் பின்னர் இஸ்லாத்தைத் தழுவினார். இத்தம்பதிகளுக்கு ஒருஆண் குழந்தையும் ஒருபெண் குழந்தையும் பிறந்தனர். ஒருவர் அலீ . மற்றொருவர் உமாமா. அலீ சிறு வயதில் மரணமடைந்து விட்டார். ஸைனப் ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் ஹி-8-ல் மரணமடைந்தார். இவரது மரணத்திற்குப்பிறகு, பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா தமது இறப்புப் படுக்கையில் கூறிய உபதேசப்படி அலீ ரலியல்லாஹு அன்ஹு, ஸைனப் ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் மகள் உமாமாவை மணந்து கொண்டார்.

2. ருகைய்யா (ரலியல்லாஹு அன்ஹா)

இவரை முதலில் அபூலஹபின் மூத்த மகன் உத்பா என்பவர் மணந்திருந்தார். இவர் இஸ்லாத்தைத் தழுவ மறுக்கவே மணவிடுதலை செய்யப்பட்டது. பின்னர் உத்மான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை மணந்து இருமுறை அபிஸீனியாவிற்கு கணவருடன் ஹிஜ்ரத் சென்;று வந்தார். அதன் பிறகு மதீனாவுக்கும் ஹிஜ்ரத் பயணம் மேற்கொண்டார். இவர்களது முதல் கரு அபிஸீனியாவிலிருந்து கப்பலில் திரும்பும் போது கலைந்து விட்டது. அதன் பிறகு அப்துல்லாஹ் என்னும் மகன் பிறந்து 6-வது வயதில் சேவல் ஒன்று கண்ணில் கொத்தி பாதிப்புக்காளாகி மரணமடைந்தார். ஹி-2-ல் பத்ருப்போர் வெற்றி பெற்ற செய்தி வரும் வேளையில் அம்மை நோயினால் பாதிக்கப்பட்ட ருகைய்யா ரலியல்லாஹு அன்ஹா அவர்களும் மரணமடைந்தனர்.

3. உம்மு குல்தூம் ரலியல்லாஹு அன்ஹா

இவரை முதலில் அபூலஹபின் இரண்டாவது மகன் உதைபா என்பவர் மணமுடித்தி ருந்தார். இவரும் இஸ்லாத்தைத் தழுவ மறுக்கவே மணவிடுதலை செய்யப்பட்டது. பின்னர் ருகைய்யா ரலியல்லாஹு அன்ஹாவை இழந்து, துயரத்தில் வாடிய உத்மான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு உம்மு குல்தூ ரலியல்லாஹு அன்ஹாவை மணமுடித்துக் கொடுக்கப்பட்டது. இதனால் உத்மான்

ரலியல்லாஹு அன்ஹு 'துந்நூரைன்' (இரு ஒளிகளைப் பெற்றவர்கள்) என சிறப்பிக்கப்பட்டார். இவ்விருவருக்கும் குழந்தைகள் பிறக்கவில்லை.

4. பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா

இவரைகளை இமாம் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மணந்து கொண்டார்.இவர்களுக்கு ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு, ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு, முஹ்ஸின் ரலியல்லாஹு அன்ஹு என்ற மூன்று ஆண் குழந்தைகளும். ஸைனப் ரலியல்லாஹு அன்ஹா, உம்மு குல்தூம் ரலியல்லாஹு அன்ஹா ஆகிய இரு பெண்குழந்தைகளும் பிறந்தனர்.

9. பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் பிள்ளைகள் 5 பேர்

அ.பெண் மக்கள் இருவர்.

1. ஸைனப் (ஸைனபுஸ்ஸுஃரா) ரலியல்லாஹு அன்ஹா

2. உம்மு குல்தூம் ரலியல்லாஹு அன்ஹா

இவர்களில் மூத்த மகள் ஸைனப் பின்த் அலியை, அலி ரலியல்லாஹு அன்ஹு வின் மூத்த சகோதரர் ஜஃபர் ரலியல்லாஹு அன்ஹு வின் மகன் அப்துல்லாஹ் இப்னு ஜஃபர் மணந்துகொண்டார். (இவர்களுக்கு அலீ , அவன் என இரு குழந்தைகள் பிறந்தனர்). இரண்டாவது மகள் உம்மு குல்தூம் பின்த் அலியை, உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மணந்து கொண்டார்கள். (இவர்களுக்கு ஸைத் என்னும் குழந்தை பிறந்து இறந்துவிட்டது.)

ஆ. பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் ஆண் மக்கள் மூவர்.

1. ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு. 2. ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு
3. முஹ்ஸின் ரலியல்லாஹு அன்ஹு

1. இமாம் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு

இமாம் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கும் மூத்த மகனாக ஹி - 3, ரமளான் பிறை 15ல் பிறந்தார்கள்.'ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு வும் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு வும் சுவர்க்கத்தின் இரு மலர்கள் (ரய்ஹானுர் ரஸூல்)' என்று அண்ணல் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள கூறினர். தமது தந்தையார் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப் பிறகு கலீபா பதவியேற்ற இவர், நாட்டு மக்களின் ஒற்றுமைக்காக தமது ஆட்சிப் பொறுப்பை ஆறு மாதத்தில் முஆவியா ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் ஒப்படைத்து விட்டு ஒதுங்;கிவிட்டார்.

'இவர் மூலம் முஸ்லிம்களுக்கிடையேயுள்ள இரு கட்சிகள் ஒன்று படும்' என்ற நாயகத்தின் முன்னறிவிப்பு நலவியது. இவர்கள் தமது 46-வது வயதில் ஹி 49-ஸஃபர் பிறை 7-ல் மறைந்தார்கள். இவர்களது உடல் மதீனாவில் ஜன்னத்துல் பகீயில் தமது தாயாரின் அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

2. இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு

இமாம் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கும் இரண்டாவது மகனாக ஹி-4, ஷஃபான் பிறை 5-ம் நாள் மதீனாவில் பிறந்தார்கள்.'முஆவியா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தம் மகன் யஸீதை கலீபாவாக நியமித்தது மக்களாட்சிக்கு எதிரானது என்றும் ஆட்சிக்குப் பொருத்தமானவர் நீங்கள் தான் என்றும்

உங்களுக்கு பைஅத் செய்ய நாங்கள் சித்தமாக உள்ளோம்' என்றும் கூபாவாசிகள் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குக் கடிதம் அனுப்பினர்.

அக்கடிதத்தை நம்பி, அநீதியை எதிர்த்து அறப்போர் செய்வது தம் புனிதக்கடமை எனக்கருதிய இவர்கள், தம் குடும்பத்தினர் நூறு பேரை அழைத்துக்கொண்டு கூபாநகர் நோக்கிப் புறப்பட்டனர்.கூபா மக்களோ இவர்களுக்குத் துரோகம் இழைத்து விட்டனர். இராக்கின் ஆளுநர் உபைதுல்லாஹ்வின் படையினருக்கும் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் நடைபெற்ற கடும் போரில் வேங்கையாகி செயல்பட்ட இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் 43 காயங்களும் வெட்டுகளும் பட்டு ஷஹீத் வீரமரணம் அடைந்தார். இவர்களின் குடும்பத்தினர் 72 பேர் இப்போரில் கொல்லப்பட்டனர். இவர்களின் உடல் கர்பலாவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. தலை மட்டும் மதீனா கொண்டு வரப்பட்டு அவரது தாயாருக்கருகில் அடக்கம் செயயப்பட்டுள்ளதாக மதீனாவின் வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.இது நிகழ்ந்தது ஹி-61 முஹர்ரம் 10 (கி.பி 680 அக்டோபர் 10)ஆம் நாளிலாகும்.

3. முஹ்ஸின் ரலியல்லாஹு அன்ஹு

இமாம் அலி ரலியல்லாஹு அன்ஹு, பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா தம்பதியினருக்கு மூன்றாவது மகனாக இவர்கள் பிறந்தார். குழந்தைப்பருவத்திலேயே இவர் மறைந்துவிட்டதால் வரலாற்றில் குறிப்பிடாது விட்டு விடுகின்றனர்.

அஹ்லுல் பைத் பற்றிய தகவல்களை விரிவாக இன்ஷா அல்லாஹ் தருவோம்

அஹ்லுல் பைத் பற்றிய தகவல் சுருக்கம்

செய்யிதுனா இமாம் அலிய்யின் கர்ரமல்லாஹு வஜ்ஹஹு ரலியல்லாஹு அன்ஹு

செய்யிததுனா பாதிமா ரலியல்லாஹு அன்ஹா

செய்யிதுனா இமாம் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு

செய்யிதுனா இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு

செய்யிதுனா இமாம் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு மகன் செய்யிது ஹஸன் அல் முதன்னா ரலியல்லாஹு அன்ஹு வலி தொடர் கிரது

செய்யிதுனா இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு மகன் செய்யிது அலீ செய்னுல் ஆபிதீன் ரலியல்லாஹு அன்ஹு வலி தொடர் கிரது